மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

தமிழ்நாட்டில் பழம் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்

87— (*வினா எண் 20544)—திரு ஏ. எம். சேதுராமன், திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் பழம், காய்கறிகள் பதப்படுத்திக் கெடாமலிருக்க நவீன வசதியுடன் கூடிய நிலையங் கள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: ஆம்.

திரு பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் இதைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 17 இடங்களில் தாம்பரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் கடலூர், சேலம், ஓசூர், கோவை, மேட்டுப்பாளையம், ஈரோடு, திருச்சி‘ தஞ்சை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோயில்.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் கட்டுவதற்கு எவ்வளவு பணம் செலவாகின்றது? இந்த 17 இடங்களிலும் கட்ட ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? இவைகளைக் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த 17 இடங்களில் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவு 893.82 இலட்சம். இதற்கு உலக வங்கியின் உதவியைப் பெற யிருக்கிறோம். மைய அரசிற்கு நாம் கருத்துருவை அனுப்பியிருக் கிறோம். பணம் கிடைத்தவுடன், இந்த வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பல ஊர்களைச் சொன்னார்கள். அதிலே எங்கள் பகுதியும் இருக்கிறது. தக்காளிப்பழம் சில நேரங்களில் அதிகமாக உற்பத்தியாவதால், சில நேரங்களில் அழுகிப்போய் குப்பையிலே போடவேண்டிய சூழ்நிலை ஏற்படு

கிறது. தக்காளிப் பழத்திலிருந்து ஜாம் செய்யக்கூடிய சூழ்நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் இந்த தக்காளிப் பழங்களை பதப்படுத்தக்கூடிய ஒரு நிலையத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சேமிப்பு கிடங்குகள் கட்டுவதன் நோக்கமே அது தான். அழுகும் பொருள்களை சேமித்து வைக்கும் வசதியில்லாத காரணத்தினால், அவசர காலத்தில் குறைந்த விலையில் விற்று, அதிக நஷ்டம் ஏற்படுகின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், அந்தத் தக்காளிப் பழங்களை சேமித்து வைப்பதற்கு உரிய நிலையத்தை ஏற்படுத்துகின்ற நடவடிக்கையும் இதிலே அடங்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலில், மதுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், கொடைக்கானல் ரோடில் நிறைய மலைவாழைப் பழங்கள், சிறுமலைப்பழங்கள், மற்றும் திராட்சை போன்றவைகள் இருக்கின்றன. அந்த மாதிரியான இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இம்மாதிரியான நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதைப்போன்ற இடங்களில் உரிய முக்கியத்துவம் சிறப்பான முக்கியத்துவம் நிச்சயமாக வழங்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்களைப் பதப்படுத்தும் கூடம் ஒன்று சேலம் மாவட்டத்திலே அமைக்கப்படுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கொல்லிமலைப் பகுதியில் அன்னாசிப் பழங்கள் நிறையக் கிடைப்பதால் அவற்றை பதப்படுத்துகின்ற வகையிலே சேலம் மாவட்டத்திலே அமைய இருக்கின்ற பழங்கள் பதப்படுத்தும் கூடத்தை கொல்லிமலைப் பகுதியில் அமைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பணம் வந்து சேர்ந்ததற்குப் பிறகுதான் மற்ற காரியங்களைச் செய்யவேண்டி இருக்கிறது. ஆனால் சேலம் மாவட்டத்திலே அத்தகைய ஒரு கூடத்தினை அமைக்கின்ற கருத்துரு அரசினிடத்தில் இருக்கின்றது.

திரு.ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அருகில் அரசின் வேளாண்மைப் பண்ணை இருக்கின்றது. அங்கே அன்னாசிப் பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே அங்கே உற்பத்தி செய்யக் கூடிய அந்தப் பழங்களைப் பதப்படுத்துவதற்கு உரிய வகையிலே அங்கே கூடம் அமைக்கின்ற நடவடிக்கையினை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நாகர்கோவிலை நான் குறிப்பிட்டேன்,

நிலக்கடலை சாகுபடிக்கான மேம்பாட்டுத் திட்டம்

88—(*வினா எண். 20679)—திரு. சி. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடைளிப்பாரா—

(அ) நிலக்கடலை சாகுபடியின் மேம்பாட்டிற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் மத்திய அரசின் பங்கென்ன?

மாண்புமிகு டாக்டர் கா.காளிமுத்து: (அ) நிலக்கடலை சாகுபடியின் மேம்பாட்டிற்கு மாநில அரசு எண்ணெய் வித்துக்கள் அதிகரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. மைய அரசினால் மானியம் பெறும் தீவிர நிலக்கடலை அபி விருத்தித் திட்டம், புதிய நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யும் திட்டம், ஆகிய இரண்டு திட்டங் களும் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மைய அரசின் மானியம் பெறும் 2 திட்டங்களில், சில இனங்களின் கீழ் 100 சதவீத மானியமும், சில இனங்களின் கீழ் 50 சதவீதம் மானியமும் ஆண்டுதோறும் பெறப்படுகின்றன.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மணிலாப்பயறு என்பதைப் பொறுத்தவரையில் தேசிய அளவிலே நாம் பயிரிடுகிறோம். தமிழகத்தில் கிட்டத்தட்ட 9 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலே நாம் மணிலாப்பயறு உற்பத்தி செய்கிறோம். இதிலே ஒரு ஏக்கருக்கு 100 கிலோ, 200 கிலோ தான் மகசூல் கிடைக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆகவே மணிலாப் பயிரினை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் உற்பத்தி ஆகுமோ, ஆகாதோ என்பதைப்பற்றி சரியாக அறியாத நிலை மையில் செலவிடவேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே அவர்களுக்கு நல்ல உரம், நல்ல விதை, நல்ல பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் பெறுகின்ற வகையில் ஆராய்ந்து தெரிந்துகொள்கின்ற வகையில் ஒரு குழுவினை அமைக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கின்றதா.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அரசினுடைய திட்டங்கள் எல்லாம் நிலக் கடலையினை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அதற்காகத்தான் வேளாண்மைத் துறையில் எண்ணெய் வித்துக் கள் துறை என்று தனியாக ஒரு துறையையே நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். எனவே இப்படிப்பட்ட நல்ல மேம்பாட்டினைப் பெறுவதற்காகத்தான் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற பகுதிகளில் ஆனந்த் பாணியிலே சில முயற்சி களை மேற்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சிகள் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கின்றன என்பதைத்தான் கிடைத்திருக்கின்ற புள்ளிவிவரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.